இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

**பிரசன்ன குமார் எதிர் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு**

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (அந்நபரினூடாக)* /[1551]/[2019]- *ஆணை 27.08.2019 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்புக்களின் ஒரு அங்கமாக வழங்கப்பட்டது.*

*2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான ஆணை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு*

**ஆணைக்குழு தவிசாளர்**: திரு. மஹிந்த கம்மம்பில
**ஆணைக்குழு உறுப்பினர்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
**ஆணைக்குழு உறுப்பினர்:** திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
**ஆணைக்குழு உறுப்பினர்:** கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
**ஆணைக்குழு உறுப்பினர்:** நீதிபதி ரோஹினி வல்கம

**மேன்முறையீட்டாளர்:** பிரசன்ன குமார்
**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** குறித்தளிக்கப்பட்ட அலுவலர், மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு
**தோன்றல் /பிரதிநிதித்துவப்படுத்தல்**
**மேன்முறையீட்டாளர்:** பிரசன்ன குமார்

**பகிரங்க அதிகார சபை:** திருமதி. டீ.கே. துரைச்சாமி, மேலதிக செயலாளர் (தகவல் அலுவலர்), டி.பி.எம்.சி.எச் தர்மராஜா, PMA

| | |
|---|---|
| **தகவல் கோரிக்கை பதியப்பட்ட தினம்** | 11/03/2019 |
| **தகவல் அலுவலர் பதிலிறுத்த தினம்** | 22/06/2019 |

**சுருக்க நிகழ்வு பின்னணி:**

மேன்முறையீட்டாளர் 11.03.2019 எனத் திகதியிடப்பட்டத் தகவல் கோரிக்கையினூடாகப் பின்வரும் தகவல்களைக் கோரியுள்ளார்:

1. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையில் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள்
2. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையில் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணம் மற்றும் செலவு விபரங்கள்

இத் தகவல்களைப் பெற்றுக் கொண்டதுடன் அவற்றை மையமாகக் கொண்டு, 04.08.2019 அன்று "இந்திய வீடமைப்புத் திட்டம்: அமைச்சரின் உணவுக்கும் நிதி ஒதுக்கப்படுகிறதா?" எனத் தலைப்பிடப்பட்ட ஒரு கட்டுரையினை தினக்குரல் செய்திப்பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்.

குறிப்பிட்ட அக்கட்டுரையின் வெளியீட்டினைத் தொடர்ந்து கீழே பெயர்க்குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர்களால் மேன்முறையீட்டாளருக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் 13.08.2019 அன்று மேன்முறையீட்டாளர் ஆணைக்குழுவில் சமர்ப்பித்த முறைப்பாட்டிற்கு பதிலிறுக்கும்விதமாக இவ்விளக்கம் அமைகின்றது. கோருனர்- மேன்முறையீட்டாளரின் இம்மேன்முறையீடு அவரின் உயிர் மற்றும் சுதந்திரத்துடன் தொடர்புறுகின்றமையால் அவசரத்தன்மையின் அடிப்படையில் விளக்கம் கேட்கப்பட்டது.

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்:**

கோருனர்- மேன்முறையீட்டாளர் மற்றும் பகிரங்க அதிகார சபை ஆகிய இரு தரப்பினரும் விளக்கத்தின்போது பிரசன்னமாகியிருந்தனர். தனது முறைப்பாட்டை விபரமாக விளக்கிய கோருனர்- மேன்முறையீட்டாளர் தான், தகவல் அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்டத் தகவல்களைப் பயன்படுத்தி "இந்திய வீடமைப்புத் திட்டம்: அமைச்சரின் உணவுக்கும் நிதி ஒதுக்கப்படுகிறதா?" எனத் தலைப்பிடப்பட்ட ஒரு கட்டுரை ஆக்கத்தினை தினக்குரல் செய்திப்பத்திரிகைக்கு 04.08.2019 அன்று எழுதியிருந்ததாக கூறினார். அக்கட்டுரை வெளியானதைத் தொடர்ந்து, 05.08.2019 அன்று அமைச்சின் மக்கள் தொடர்பு அதிகாரி பழனி விஜயகுமார் தன்னுடைய தனிப்பட்ட தொலைப்பேசி இலக்கத்தினூடாகத் தன்னைத் தொடர்பு கொண்டு அமைச்சரிற்கு ஆதரவாகத் தான் எழுதிய கட்டுரை தொடர்பில் தன்னை அச்சுறுத்தியதாக கோருனர்- மேன்முறையீட்டாளர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் 06.08.2019 அன்று தொலைபேசியினூடாகத் தொடர்பு கொண்டு தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி அவரை அச்சுறுத்தியதாக அவர் தெரிவித்தார். மேலும், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் கணபதி நகுலேஷ்வரன் என்பவரும் 06.08.2019 அன்று அவரைத் தொடர்பு கொண்டு அச்சுறுத்தியதாக குறிப்பிட்டார். கோருனர்- மேன்முறையீட்டாளர் இத்தொடர்பாடல்கள் தொடர்பில் அவரால் பதிவு செய்யப்பட்ட சிறிய ஒலிப்பதிவொன்றினை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்ததுடன் அவருடைய புகைப்படம் முகநூலில் பரப்பப்படுவதாகவும் அமைச்சரின் அரசியற் கட்சியினைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அவரை சமூக ஊடகங்களில் தாக்குவதாகவும் தெரிவித்தார். கோருனர்- மேன்முறையீட்டாளரிற்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் தொடர்பில் மேன்முறையீட்டாளரை முதன்மைப்படுத்திய செய்தி ஆக்கங்கள் மற்றும் நேர்காணல்களினூடாக சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் பி.பி.சி என்பன முறையே 09.08.2019 மற்றும் 12.08.2019 ஆகிய தினங்களில் தமது அவதானத்தை செலுத்தியிருந்தன.

அமைச்சர் மற்றும் அமைச்சு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளக்க விரும்புவதாக பகிரங்க அதிகார சபை பதிலிறுத்தது. பகிரங்க அதிகார சபையினை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்திருந்த நபர் தான் அமைச்சினையே பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் அமைச்சரைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லையெனவும் கூறினார். மேலும், மக்கள் தொடர்பு அதிகாரி மற்றும் ஒருங்கிணைப்புச் செயலாளர் ஆகியோர் அமைச்சரின் தனிப்பட்ட பணியாளர்கள் என்பதுடன் அவர்கள் அமைச்சுடன் தொடர்புபட்டவர்கள் அல்ல என கூறினார். மேலும், மேன்முறையீட்டாளரின் முறைப்பாட்டிலுள்ள நிகழ்வுகளின் துல்லியத்தன்மை தொடர்பிலும் பகிரங்க அதிகார சபையினால் எதுவும் கூற முடியாதுள்ளதாக பகிரங்க அலுவலர் தெரிவித்தார்.

**ஆணை:**

தகவலுக்கான உரிமைச் சட்டம் 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதிலிருந்து இவ் ஆணைக்குழுவின் அவதானத்திற்கு கொண்டுவரப்பட்ட அதிர்ச்சியூட்டுகின்ற அச்சுறுத்தல்களுள் ஒன்றாக இத்தகவல் கோரிக்கையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அமைந்துள்ளன. குறிப்பிட்ட அச்சுறுத்தலுக்கு பொறுப்பானவர்கள் எனப் பெயரிடப்பட்ட தனிநபர்கள் அவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குறிப்பான குற்றச்சாட்டுகைகளை இவ் ஆணைக்குழுவின் முன்னிலையில் வினைத்திறனாக மறுக்கவில்லை. அதற்கு பதிலாக, பகிரங்க அதிகார சபை இச்சம்பவம் தொடர்பில் அறிந்திருக்கவில்லை என தனது பிரதிநிதியினூடாக வெளிப்படுத்தியிருந்தது. அமைச்சரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைச்சு எவ்விதமான முரணான அல்லது எதிர் கோரிக்கைகளை மேற்கொள்ளாமையினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது, கோரிக்கையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள தீவிரமான முறைப்பாடு சவாலுக்குட்படுத்தப்படவில்லை என்பதனை ஆணைக்குழு அவதானிக்கின்றது. மேலும், குறிப்பிட்ட அமைச்சு குறிப்பிட்ட அமைச்சரின் பிரிவிற்குள் உள்ளடக்கப்படுவதால் பகிரங்க அதிகார சபை கோரியதன்படி அமைச்சர் மற்றும் அமைச்சிற்கு இடையில் வேறுபாடொன்றினை மேற்கொள்ள முடியாது என்பது நிரூபணமாவதுடன் அது பொறுப்புடையதுமாகும்.

தகவலுக்கான உரிமைச் சட்டத்திற்கு அமைவாக மற்றும் அதன்கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் தகவல் கோரிக்கைகளை மேற்கொள்கின்ற பிரஜைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற அச்சுறுத்தல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் இவ் ஆணைக்குழு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஆணைக்குழுவின் அத்தகைய நடவடிக்கை தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 39(1)(அ) இன் கீழ் பொறுப்புடைய நபர்களுக்கு எதிராக வழக்குத்தொடுப்பிற்கான அறிவித்தலை வழங்குவதற்கான ஆணைக்குழு தீர்மானத்திற்கும் வழிவகுக்கும்.

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 39(1)(அ) பின்வருமாறு கூறுகின்றது:

*39. (1) (அ) <u>இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட தகவலை வழங்குவதற்கு வேண்டுமென்று மறுக்கின்ற அல்லது சரியற்ற, பூர்த்தியற்ற அல்லது சரியானதற்ற தகவலை எண்ணத்துடன் ஏற்பாடு செய்கின்ற</u>*

*எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவரினாலான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.*

கோரிக்கையாளரால் பெயரிடப்பட்ட தனிநபர்களினால் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்கள் இன்னமும் தொடர்கின்றனவா என கோரிக்கையாளரிடம் வினவப்பட்டபோது, அவ் அச்சுறுத்தல்கள் தொடரவில்லை என பதிலிறுக்கப்பட்டது. ஆகவே, இத்தகைய சந்தர்ப்பங்களின் அடிப்படையில், சட்டத்தின் முழுமையான அமுலாக்கத்தினை உறுதிப்படுத்தும்பொருட்டு இவ்விடயத்தை கண்காணிப்பதற்காக மற்றும் இதில் தலையீடு செய்வதற்காக இவ்விடயத்தை விசாரணையின் கீழ் வைத்திருப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.

கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறைகள் தொடர்பான ஆணைக்குழுவின் விதிகளில் (வர்த்தமானி இல. 2004/66, 03.02.2017) 27(3) ஆம் ஒழுங்குவிதிக்கு அமைய ஆணை இரு திறத்தவர்களுக்கும் அனுப்பப்பட்டது.